இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 171 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 18 – வியாழக்கிழமை 01 பிப்ரவரி 2024 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 171: Thiruvalluvar Year - 2055 - Thai 18 - Thursday 01 February 2024 - Chennai 12 Pages ₹ 5.00





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, ரோக்கா நிறுவனத்தின் சர்வதேச இயக்குநர் Mr.Carlos Velazquez மற்றும் இந்திய இயக்குநர் நிர்மல் குமார் ஆகியோர், பெருந்துறையில் புதிய குழாய்கள் மற்றும் இணைப்புகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை நிறுவிடவும், இராணிப்பேட்டையிலும் பெருந்துறையிலும் செயல்பட்டு வரும் தொழிற்சாலைகளை விரிவாக்கம் செய்வது தொடர்பாகவும் சந்தித்துப் பேசினார்கள். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, 'Guidance' நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, ஆக்சியானா நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தமிழ்நாட்டில் ஆக்சியானா நிறுவனம் மின் உற்பத்தி - நீர் சுத்திகரிப்பில் முதலீடு செய்கிறது!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் ஸ்பெயின் நாட்டு தொழில்துறையினர் சந்திப்பு!

## ரூ.400 கோடியில் ரோக்கா நிறுவனம் புதிய குழாய்கள் உற்பத்தி மற்றும் தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளை விரிவாக்கம் செய்ய உறுதி!

**மேட்ரிட் (ஸ்பெயின்) பிப். 1-**

**ஸ்பெயின் நாட்டின் முன்னணி நிறுவனங்களின் நிர்வாகிகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன் சந்திப்பு நடத்தினர். ஆக்சியானா நிறுவனம் தமிழ்நாட்டில் காற்றாலை மின் உற்பத்தி, நீர் சுத்திகரிப்பு, நீர் மறுசுழற்சி ஆகியவற்றில் முதலீடு செய்திட ஆர்வம் காட்டியுள்ளது. 400 கோடி ரூபாய் முதலீட்டில் ரோக்கா நிறுவனம் பெருந்துறையில் புதிய குழாய்கள் மற்றும் இணைப்புகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை நிறுவிடவும், இராணிப்பேட்டையிலும் பெருந்துறையிலும் செயல்பட்டு வரும் தொழிற்சாலைகளை விரிவாக்கம் செய்யவும் உறுதி தெரிவித்துள்ளது.**

தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, அரசுமுறை பயணமாக ஸ்பெயின் நாட்டிற்கு வருகை தந்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஸ்பெயின் நாட்டில் உள்ள பல்வேறு தொழில்துறை குழுமங்கள் மற்றும் முன்னணி நிறுவனங்களின் நிர்வாகி களுடன் 29.1.2024 அன்று தொழில் முதலீட்டு மாநாட்டில் கலந்துரையாடினார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை ஆக்சியானா நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் Mr. Rafael Mateo மற்றும் நீர் பிரிவு முதன்மை செயல் அலுவலர் Mr. Manuel Manjn Vilda ஆகியோர் தமிழ்நாட்டில் காற்றாலை மின் உற்பத்தி, நீர் சுத்திகரிப்பு, நீர் மறுசுழற்சி ஆகியவற்றில் முதலீடு செய்வது குறித்து சந்தித்துப் பேசினார்கள். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, 'Guidance' நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, ஆக்சியானா நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் ஸ்பெயின் முன்னணி நிறுவன நிர்வாகிகள் சந்திப்பு!**

அதன் தொடர்ச்சியாக, நேற்று முன்தினம் (30.1.2024) ஸ்பெயின் நாட்டில் உள்ள முன்னணி நிறுவனங்களின் நிர்வாகிகள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து பேசினார்கள். அப்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் முதலீடுகள் செய்திட வலியுறுத்தினார்கள்.

ஆக்சியானா நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் Mr. Rafael Mateo அவர்களும், Mr. Manuel Manjn Vilda, CEO Water Division அவர்களும் தமிழ்நாடு முதல்வர் அவர்களை சந்தித்து பேசினார்கள்.

இச்சந்திப்பின்போது, காற்றாலை மின் உற்பத்தியிலும், நீர் சுத்திகரிப்பு, நீர் மறுசுழற்சியிலும் இந்தியாவின் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு திகழ்ந்து வருவது குறித்தும், இத்துறையில் பல பெரும் முக்கிய நிறுவனங்கள் ஏற்கனவே தமிழ்நாட்டில் செயல்பட்டு வருவது குறித்தும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முதலீடுகளுக்கான தனிக்கொள்கை ஒன்றையும் வகுத்து தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்றது என்றும், எனவே இத்துறைகளில் சர்வதேச அளவில் முன்னிலை வகிக்கும் நிறுவனமாகிய ஆக்சியோனா நிறுவனத்தின் முதலீட்டிற்கு உகந்த இடமாக தமிழ்நாடு இருக்கும் என்று முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

**தமிழ்நாட்டில் முதலீடு குறித்து அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா விளக்கம்!**

இத்துறையின் முதலீட்டு வாய்ப்புகள் பற்றி தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா விரிவாக விளக்கினார். இந்த கலந்தாலோசனையின் முடிவில்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## மத நல்லிணக்கத்துக்கு எதிரான பா.ஜ.க. அரசின் நாசகாரச் செயல்!

# தமிழ்நாட்டில் சி.ஏ.ஏ.வை கழக அரசு ஒருபோதும் அனுமதிக்காது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, பிப். 1 -**

**மத நல்லிணக்கத்துக்கு எதிரான பா.ஜ.க. அரசின் நாசகாரச் செயல்களையும், அ.தி.மு.க.வின் நயவஞ்சக நாடகத்தையும் மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் எனவும், பா.ஜ.க. கொண்டு வரும் குடியுரிமை திருத்தச் சட்டத்தை (சி.ஏ.ஏ.) தமிழ்நாட்டில் கழக அரசு ஒருபோதும் அனுமதிக்காது; இலங்கைத் தமிழர்களுக்கு, இஸ்லாமியர்களுக்கு எதிரான இந்தச் சட்டத்தை தமிழ்நாட்டில் கால்வைக்க விடமாட்டோம் எனவும் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதிபடக் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ட்விட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:–

ஏழு நாட்களில் மேற்கு வங்கம் மட்டுமல்லாது இந்தியா முழுவதும் குடியுரிமை திருத்தச் சட்டம் (CAA) நடைமுறைப்படுத்தப்படும் என்று கூறியிருக்கிறார் பா.ஜ.க.வைச் சேர்ந்த ஒன்றிய இணையமைச்சர் ஒருவர்.

**இசுலாமியர்களுக்கு எதிரான சட்டம் வரக் காரணம் அ.தி.மு.க.!**

இலங்கைத் தமிழர்களுக்கும், இசுலாமியர்களுக்கும் எதிரான CAB சட்டம் ஆனதற்கு முழுமுதற்காரணமே நாடாளுமன்றத்தில் அ.தி.மு.க. ஆதரித்து வாக்களித்ததுதான்.

அப்போது எதிர்க்கட்சியாக இருந்தாலும் தோழமை இயக்கங்களுடன் இணைந்து மிகப் பெரிய அளவில் போராட்டங்களை நடத்தியதுடன், இரண்டு கோடிப் பேரிடம் கையெழுத்து பெற்று அதனைக் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தது கழகம். 2021 இல் ஆட்சிக்கு வந்த உடனே CAA வைத் திரும்பப் பெற வலியுறுத்திச் சட்டமன்றத்தில் தீர்மானமே நிறைவேற்றினோம்.

**அ.தி.மு.க.வின் நயவஞ்சக நாடகத்தை மக்கள் அறிவார்கள்!**

தமிழ்நாட்டில் குடியுரிமைத் திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதைத் தி.மு.க. அரசு ஒருபோதும் அனுமதிக்காது.

மதநல்லிணக்கத்துக்கு எதிரான பா.ஜ.க. அரசின் நாசகாரச் செயல்களையும், அதற்குத் துணைபோகும் அ.தி.மு.க.வின் நயவஞ்சக நாடகங்களையும் நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

**தமிழ்நாட்டில் சி.ஏ.ஏ.வை கால்வைக்க விடமாட்டோம்!**

உறுதியாகச் சொல்கிறேன். தமிழ்நாட்டினுள் CAA கால்வைக்க விடமாட்டோம்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.